# நாணயச் சபை

# இலங்கை மத்திய வங்கி

2018 நவெம்பர் 21 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் | 2018இன் 08ஆம் இலக்கம்

## பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிகர நிலையான நிதியிடல் விகிதம்

சொத்துக்களின் உள்ளமைப்பு மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான நடவடிக்கைகள் தொடர்பில் நிலையான நிதியிடல் தோற்றப்பாட்டினை உறுதிப்படுத்துகின்ற குறிக்கோள்களுடன் 2014 ஒத்தோபரில் வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் விடுக்கப்பட்ட "பாசல் III: நிகர நிலையான நிதியிடல் விகிதம்" இற்கிணங்க உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிகர நிலையான நிதியிடல் விகிதத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) பிரிவுகளினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் நாணயச் சபை இப்பணிப்புரைகளை விடுக்கிறது.

1. அதிகாரமளிப்பு

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76(ஜே)(1) என்பனவற்றின் நியதிகளில் வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு முறையே உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அவற்றின் வியாபாரத்தின் ஒவ்வொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி அனைத்து வங்கிகளுக்கும் அல்லது ஏதாவதொரு வங்கிக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. ஏற்புடைத்தன்மையின் செயற்பரப்பு

2.1 இப்பணிப்புரைகள் (i) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அத்துடன் (ii) இலங்கைக்கு வெளியே தனியானதொரு அடிப்படையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட வங்கிகளின் கிளைகளுக்கும் ஏற்புடைத்தானவையாக இருத்தல் வேண்டும்.

3. குறைந்தபட்சத் நிகர நிலையான நிதியிடல் விகிதம்

3.1 2019 சனவரி 01ஆம் நாள் தொடக்கம் ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் அனைத்து நேரங்களிலும் நிகர நிலையான நிதியிடல் விகிதத்தினைக் கீழே காட்டப்பட்டவாறு பேணுதல் வேண்டும்:

| நடைமுறைக்குவரும் திகதி | 01.01.2019 | 01.07.2019 |
|---|---|---|
| குறைந்தபட்சத் தேவைப்பாடு | 90% | 100% |

4. வெளிப்படுத்துகைத் தேவைப்பாடு

4.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் நிகர நிலையான நிதியிடல் விகிதத்தினைப் பின்வருமாறு வெளிப்படுத்துதல் வேண்டும்:

(i) அறிக்கையிடும் காலப்பகுதிக்கும் முன்னைய அறிக்கையிடும் காலப்பகுதிக்குமான நிகர நிலையான நிதியிடல் விகிதமும் குறைந்தபட்சத் தேவைப்பாடும்:

(அ) செய்தித்தாள்களிலும் வெப்தளத்திலும் காலாண்டு ரீதியில்

(ஆ) ஆண்டுதோறும் செய்தித்தாள்களில், ஆண்டறிக்கை மற்றும் வெப்தளத்திலும்.

(ii) பின்வரும் முக்கிய கூறுகளின் தகவல்களுடன் சேர்த்து அறிக்கையிடும் காலப்பகுதிக்கும் முன்னைய அறிக்கையிடும் காலப்பகுதிக்குமான அட்டவணை I இன் பின்னிணைப்பு I இன் பகுதி I இல் அறிக்கையிடப்பட்ட தகவல்கள்:

(அ) வெப்தளத்தில் காலாண்டு ரீதியில்; அத்துடன்

(ஆ) வெப்தளம் மற்றும் ஆண்டறிக்கைகளில் ஆண்டுதோறும்.

5. ஒழுங்குமுறைப்படுத்தலை அறிக்கையிடுதல்

5.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற நிகர நிலையான வங்கியும் ஒவ்வொரு காலாண்டினதும் இறுதிக் கலண்டர் நாளன்று உள்ளவாறு நிகர நிலையான நிதியிடல் விகிதமானது வெப்பினை அடிப்படையாகக் கொண்ட தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறைமையூடாக கூற்று மூலம் (BSD-QF-32-1A, BSD-QF-32-2A, BSD-QF-32-3A மற்றும் BSD-QF-32-3B) ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த பின்னர் ஒரு மாதத்திற்குள் இங்கேயுள்ள அட்டவணை I இல் உள்ளவாறு அறிவித்தல் வேண்டும்.

**முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இந்தப் பணிப்புரையின் பின்னிணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Direction_No_8_of_2018.pdf என்ற வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.